**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C.**193/2023

**Prosecution Witness** : 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சதீஸ் படேல் | **Caste** | : | |
| **Father's Name** | : | திரு. ராம்ஜி படேல் | **Calling** | : | |
| **Village** | : | இந்திரா நகர் | **Religion** | : | இந்து |
| **Taluk** | : | திண்டுக்கல் | **Age** | : | 43 |
| | | | **Dated** | : | 12.09.2024 |

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

---

**A**1, **A**2 **present**. **Both side counsels present**.

பட்டியல் சாட்சி 1 திரு. சதீஸ் படேல் ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அ.சா. 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து மர அறுவை மில் மற்றும் மரக்கடை வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். பட்டியல் சாட்சி -2 மனோஜ் படேல் எனது தம்பி. கடந்த 04.12.2021ம் தேதி மாலை சுமார் 03.15 மணி அளவில் மரமில்லில் நானும், எனது தம்பி மனோஜ் படேலும், எனது டிரைவர் பட்டியல் சாட்சி கோபால் ஆகியோர் மரம் இறக்கி கொண்டு இருந்தோம். அந்த சமயத்தில் திடீரென என் தம்பியை

காணவில்லை. எங்கே போனார் என தெரியவில்லை. அவரை தேடிக் கொண்டு மில்லை விட்டு வெளியே வந்து வத்தலக்குண்டு மெயின் ரோட்டிற்கு வந்தபோது ஆஜர் எதிரிகளும், எனது தம்பியும் வாய் சண்டை போட்டுக் கொண்டு இருந்தார்கள். சரவணக்குமார் எனது தம்பியை பார்த்து தேவிடியா மகனோ நீ எனது தங்கையை வேலையை விட்டு தூக்கியதால் உன்னால் எங்கள் வீட்டில் பிரச்சனை ஆகிவிட்டது. அதனால் இதோடு நீ செத்து தொலைடா என சொல்லி தான் வைத்து இருந்த கத்தியால் எனது தம்பியை குத்தினார். அதனால் என் தம்பிக்கு இடது கழுத்திற்கு மேலும், கீழுமாக இரண்டு இரத்த காயங்கள் ஏற்பட்டது. உடன் இருந்த 2-வது எதிரி கோவிந்த ராஜ் என் தம்பியை பார்த்து உன்னிடம் 10 வருடமாக வேலை பார்க்கிறேன் ரோட்டில் வரும்போதும் போகும் போதும் பணம் கேட்பாயா என சொல்லி சரவணக்குமாரிடம் இருந்து கத்தியை பிடுங்கி என் தம்பியின் தாடைக்கு கீழ் குத்தி இரத்த காயம் ஏற்பட்டது. போடா தேவிடியா மகனே இதோடு செத்து போடா என சொல்லி எங்களை பார்த்தவுடன் இரண்டு பேரும் மேற்கு பார்த்து ஓடிவிட்டனர். என் தனக்கு ஏற்பட்ட காயங்களால் மயங்கிவிட்டார். நாங்கள் உடனே எங்கள் சொந்த காரில் பழனி ரோட்டில் உள்ள **JCB** மருத்துவமனையில் அவரை ஏற்றிக் கொண்டு சென்று சிகிச்சைக்காக சேர்த்தோம். அவரை பரிசோதித்த மருத்துவமனை மருத்துவர்கள் அவருக்கு முதல் உதவி சிகிச்சை அளித்துவிட்டு மேல் சிகிச்சைக்காக மதுரை அப்பல்லோ மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். மதுரை அப்பல்லோ மருத்துவமனையில் திண்டுக்கல் தாலுகா சார்பு ஆய்வாளர் திரு.விஜயகுமார் அவர்கள் என்னை விசாரித்தார். அவரிடம் சம்பவம் சம்பந்தமாக புகார் கூறினேன். அவர் எனக்கு தமிழ் எழுத, படிக்க தெரியாததால் என்னுடன் வந்த பெரியசாமி என்பவரிடம் நான் சொல்ல சொல்ல அவர் புகாரை எழுதினார். என்னிடம் காட்டப்படும்

ஆவணம் நான் கொடுத்த புகார் ஆகும். அதில் கையெழுத்து என்னுடையது தான். அதில் பெரியசாமி சாட்சி கையெழுத்து போட்டு இருக்கிறார். அந்த புகார் **Ex.P**1. என்னிடம் காட்டப்படும் கத்தி எதிரிகள் என் தம்பியை குத்துவற்காக பயன்படுத்திய கத்தி ஆகும். அது சா.பொ.1. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-

கோபால் என்பவர் எங்களுடன் சேர்ந்து மர லோடு ஏற்றிக் கொண்டு இருந்ததாக எனது புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 2-வது எதிரி கோவிந்தராமஜின் அப்பா பெயர் முத்துராஜ் என்றால் சரிதான். இரண்டு எதிரிகளையும் சம்பவத்திற்கு முன்பே எனக்கு தெரியும் என்றால் சரிதான். சம்பவம் நடைபெறுவதற்கு 1 ½ வருடத்திற்கு முன்பே 1-வது எதிரியின் தங்கையை வேலையை விட்டு நிறுத்தி விட்டோம் என்றால் சரிதான். அது பற்றி 1-வது எதிரியின் சகோதரி காளீஸ்வரியோ அல்லது அவரது கணவரோ என்னிடம் எதுவும் கேட்கவில்லை. சம்பவத்திற்கு முன்பு தனது சகோதரியை வேலையை விட்டு நிறுத்தியதற்காக 1-வது எதிரி எங்களிடம் ஏதாவது பிரச்சனை செய்தாரா என்றால் இல்லை. 2-வது எதிரி என்னிடம் 2021ம் வருடம் 10வது மாதம் தீபாவளி பண்டிகைக்காக முன்பணம் கொடுத்த விபரத்தை புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் புகார் கொடுக்கும் வரை எனது தம்பி மனோஜ் படேல் இது சம்பந்தமாக என்னிடம் எதுவும் பேசவில்லை என்றால் சரிதான். நாங்கள் எனது தம்பியை திண்டுக்கல் **JCB** மருத்துவமனையில் சேர்த்தபோதே விபரம் தெரிந்து போலீசார் அங்கு வந்துவிட்னர் என்றால் இல்லை. அந்த மருத்துவமனையில் சுமார் ½ மணி நேரம் நானும், கோபாலும் இருந்தோம். அங்கு மருத்துவரிடம் நடந்த விபரத்தை கூறினேன். போலீசாரிடமும் அதே

விபரத்தை தான் கூறினேன். நான் **JCB** மருத்துவமனை மருத்துவரிடம் ஒரு அடையாளம் தெரியாத நபரால் சிவசக்தி மர மில் அருகே என் தம்பி தாக்கப்பட்டதாக சொல்லி இருக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது வழக்கிற்காக மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி என்னை தாக்கவில்லை. எதிரி என் தம்பியை தாக்கியபோது அதனை நாங்கள் தடுக்கவில்லையா என்றால் நாங்கள் போவதற்கு முன்பே அவர்கள் ஓடிவிட்டார்கள், சாட்சி மீண்டும் போகும் போதே அவர்கள் ஓடிவிட்டனர் என்று கூறுகிறார். நாங்கள் அவர்களை துரத்தி கொண்டு செல்லவில்லை. என் தம்பியை நாங்கள் மருத்துவமனைக்கு எடுத்து சென்றபோது எங்கள் ஆடைகளில் இரத்த கறை படவில்லை. எங்கள் அலுவலகத்தில் பெண்கள் வேலை பார்க்கிறார்கள். என் தம்பி எங்கள் அலுவலகத்தில் வேலை பார்க்கும் பெண்களிடம் தவறாக நடந்து கொண்டார் என்றால் இல்லை. தொடர்ச்சியாக அவர் பெண்களிடம் தவறாக நடந்து கொண்டதால் அவருக்கு நிறைய எதிரிகள் இருக்கிறார்கள் என்றால் இல்லை. நான் சொன்னது போல எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், வழக்கின் எதிரிகள் என் தம்பியை தாக்கவில்லை என்றும், சம்பவத்தை நான் பார்க்கவில்லை என்றும், சந்தேகத்தின் பேரில் எதிரிகள் மீது இந்த வழக்கை கொடுத்து இருக்கிறேன் என்றால் சரியல்ல.

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2024.09.12 15:18:14 +0530